உ

சிவமயம்.

மதுரைக்

கண்ணங்கூத்தனார் செய்த

கார் நாற்பது.

இஃது

உரையுடன்

சண்முகசுந்தரமுதலியா

ரவர்களாற் பரிசோதித்து

திரிசிரபுரம் புத்தகவியாபாரம்

சபாபதிபிள்ளை

யவர்களது

மட்டுவார்குழலாம்பாள் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

மிதுனரவி.

சிந்தாத்திரிப்பேட்டை சாமிநாயக்கர் வீதி-௬௯- நெம்பர்

சங்கமருவிராய்த்தெனல்ங் கீழ்க்கணக்காவன
நாலடிநான்மணிநானாற்பதைந்திணைமுப்
பால்கடுகங்கோவைபழமொழி-மாமூல
மெய்ந்நிலைகாஞ்சியோடேலாதியென்பவே
கைந்நிலையவாங்கீழ்கணக்கு.

ஒன்பனுவாம்.

உ

சிவமயம்.

கார்நாற்பது மூலமும் உரையும்.

பொருகடல்வண்ணன்புனைமார்பிற்றார்போற்
றிருவில்விலங்கூன்றித்தீம்பெயறாழ
வருதுமெனமொழிந்தார்வாரார்கொல்வானங்
கருவிருந்தாலிக்கும்பொழுது.

(தோழிதலைமகட்குப் பருவங்காட்டி வற்புறீஇயது)

எ-து பொருகடலினதுநிறம்போன்ற நிறத்தினை யுடையான் புனைந்தமார்பிற் பூமாலைபோல விந்திரவில்விலங்காகவூன்றி யினியபெயல்விழாநிற்க வருவே மென்றுசொல்லினர் வாராரோ மழைகருக்கொண்டிருந்து துளிக்கொவிடாநின்றதாதலான். (க)

கடுங்கதிர்நல்கூரக்கார்செல்வமெய்த
நெடுங்காடுநேர்சினையீனக்-கொடுங்குழாய்
இன்னேவருவர்நமரென்றெழில்வான
மின்னுமவர்தூதுரைத்து.

(இதுவுமது.)

எ-து பகலோனுடைய கடுங்கதிர்கள்வறுமையுறக் கார்காலஞ்செல்வமுற நெடியகாடெல்லாமிகப்ப

ன்றாக் கொடுங்குழையையுடையாய் நமரிப்பொழுதே வருவரென் றெழிலையுடையமுகில் மின்னாநின்ற தவர் தூதாயறிவித்து. (௨)

வரிநிறப்பாதிரிவாடவளிபோழ்ந்
தயிர்மணற்றண்புறவினாலி-புரள
வுருமிடி வானமிழிய வெழுமே
நெருநலொருத்திதிறத்து.

(பருவங்கண்டழிந்த தலைமகளாற்றல்வேண்டித்
தோழிதனதாற்றாமைதோன்றவுரைத்தது.)

எ-து வரிநிறத்தையுடையபாதிரிப்பூ வாடும்வகை காற்றூடறுக்கப்பட்டிளமணலையுடையதண்புறவின்கணாலங்கட்டிபுரள வுருமிடிக்குமுகிலிழிதராநின்றதெழாநின்றது. நெருநற் றையலாளொருத்திமாட்டே வருந்துவான்வேண்டி-எ-று. அல்லது உநெருநற்றே தொடங்கித் தனியாண்மாட்டென்றுமாம். (௩)

ஆடுமகளிரின மஞ்ஞையணிகொள
காடுங்கடுக்கைகவின்பெறப்பூத்தன
பாடுவண்டூதும்பருவம்பணைத்தோளி
வாடும்பசலை மருந்து

(பருவங்காட்டித்தலைமகளைவற்புறுத்தியது.)

எ-து கூத்தாடுமகளிரேபோல மயில்களழகுபெறக் காடுகளுங்கொன்றைகளானழகுபெறப் பூத்தன

ஆம்பற்பூக்களைப்பாடுவண்டுகளூதாநின்றன, ஆதலாம்ப
லைத்தீண்டாளி வாங்கும்பசலைக்குமருந்திப்பருவம்-எ-று (

இகழுநர்ச்சொல்லஞ்சிச்சென்றார்வருதல்
பகழிபோலுண்கண்ணாய் பொய்யன்மையீண்டைப்
பவழஞ்சிதறியவைபோலக்கோபம்
தவழுந்தகையபுறவு.

(இதுவுமது)

எ-து இகழ்வார்சொல்லஞ்சிப் பொருட்குச் சென்றார்வருதலம்புபோன்றவுண்கண்ணாய்ப்பொய்யன்மையாம். இவ்விடத்துச் சிதறியபவழம்போலக் கோபங்கள்பரக்குந்தகைமையையுடையவாயின காடுகளாதலான். (௮)

தொடியிடவாற்றாதொலைந்ததோணோக்கி
வடுவிடைபோழ்ந்தகன்றகண்ணாய்வருந்தல்
கடிதிடிவானமுரறு நெறியிடைச்
சென்றாரைநீடின்மினென்று

(இதுவுமது.)

எ-து வளையிடுதற்குச்சிறியவாய்த் தளர்ந்ததோளைநோக்கி மாவடுவினைப்போழ்ந்தாற்போல அகன்றகண்ணினையுடையாய்வருந்தாதொழி, கடிதிடிக்குமழைமுழங்குகின்றது கொடியவழிச்சென்றாரை நீடாதொழிமினென்றுசொல்லி—எ-று. (௯)

நச்சியார்க்கீதலுநண்ணார்த்தெறதலுந்
தச்செய்வான்சென்றார்தருஉந்தளிரியலாய்
பொச்சாப்பிலாதபுகழ்வேள்வித்தீப்போல
வெச்சாரு மின்னு மறைஉ.

(இதுவுமது.)

எ-து தம்மைநச்சியார்க்கீதலும் பகைவரைக்கெ
டுத்தலும் இவ்விரண்டுந்தம்மை விலைநிறுத்துவனவாக
நினைத்துப்பொருட்குச்சென்றாரைக் கொண்டுவருக த
ளர்ந்தவியல்பினையுடையாய் மறப்பில்லாதபுகழையுடை
ய வேள்வித்தீப்போல வெம்மருங்குமின்னுகின்றமழை-
-வாறு, (எ)

மண்ணணியன்றாலத்துமன்னும்புகழ்வேண்டிப்
பெண்ணணியனலலாய்பிரிந்தார்வரலகூறுவ
கண்ணணியலஞ்சனந்தோய்ந்தபோறகாயாவு
துண்ணெரும்பூத்த புறவு.

(இதுவுமது.)

எ - து மண்ணணியன்றவுலகத்துநிற்கும்புகழைவே
ண்டியபெண்ணணியல்லையுடையநல்லாய் நலமாயபொ
ருட்குப்பிரிந்தார் வருதலைச்சொல்லாநின்றது, கண்ணணி
ற்பெய்யப்பட்ட வஞ்சனத்தைத்தோய்ந்தனபோலக்கா
யாக்களும் துண்ணிடவரும்புகளை யலரப்பட்டபுறவுக
ள்—எ-று. (அ)

கருவிளைதண்மலர்போற்பூத்தனகார்க்கேற்
றெரிவனப்புற்றனதோன்றி-வரிவளை
முன்கையிறப்பத்துறந்தார்வரல்கூறு
மின்சொற்பலவு முரைத்து.

(இதுவுமது.)

எ-து கருவிளைகளுந் தண்மலர்போலப் பூத்தன கார்ப்பருவத்திற்கெதிர்ந்தெரியினது வனப்பையுற்றன தோன்றிப்பூக்களும் வரியையுடையவளைகண் முன்கையினின்று நீங்க வின்சொற்பலவுமுரைத்துப்போயினார் வருதலை ல்ன்றன. (௯)

வானேறுவானத்துரறவயமுரா
ணானேற்றொருத்தலதனோடெதிர்செறுப்ப
கான்யாற்றொலியிற்கடுமான்றேரொண்டொடி
மேனிதளிர்ப்பவரும்.

(இதுவுமது.)

எ - து மழையேறு முகிலின்கணின்றொலிப்ப வலியையுடையவானேறுமுடைய வானேறுதியவொருத்த லவ்வுருமேற்றோடெதிராகிவெகுள்க் கான்யாற்றொலிபோ லககடுமாவாற்பூட்டியகாதலர்தே ரொன்றுடையதோழியின்மேனிதளிர்ப்பவாநின்றது—எ-று. (௰)

புணர்தருசெல்வந்தருவான்செனறார்
வணர்பொரல்லைம்பாலுவலவருதல்கூறு

மண்ணீர்த்தெழும்பாம்பினறலைபோற்புணர்கோடல்
பூங்குலையீந்தபுறவு.

(இதுவுமது.)

எ-து பொருந்தியசெல்வத்தைக் கொளவேண்டிச்சென்றூர்வளைக்குதன்மழைத்தலைமபாலினையுடையாட்கிளைக்குவருதலைக்கூறுகின்றன, வண்ணெழுந்தபாம்பின்படம்போலப்பொருந்திய கோடல்களாற்பூங்குலையீனப்பட்டபுறவுகள்—எ-று-ஐம்பால்-பெண்மயிர். (கக

மையெழிலுண்கண்மயிலன்னசாயலா
யையந்தீர்காட்சியவர்வருதறிண்ணிதா
நெய்யணிகுஞ்சரம்போலவிருங்கொண்மூ
வைகலுமேரும் வலம.

(இதுவுமது.)

எ-து மையையுமெழிலையுமுடையவுண்கண்ணாய் மயிலன்னசாயலாய் ஐயந்தீர்ந்தவறிவினையுடைய நங்காதலர் வருதல்மெய்ம்மை, நெய்யணிந்தயானைகள் போலப்பெரியமுகில்களோடேறுமவலமாகவெழாநின்றவாதலான். (கஉ)

ஏந்தெழிலல்குலாயேமார்ந்தகாதலர்
கூந்தல்வனப்பிற்பெயருழவேந்தர்
களிறெறிவாளரவம்போலக்கண்ணகல்வி
யொளிறுடைமின்னு மழை.

(இதுவுமது.)

எ - து. அழகினையுடைய வேந்திய வல்குலினையுடையாய் துணையோடு புணர்ந்தின்பமுற்ற காதலராகிய மகளிர்கூந்தலழகுபோலப்பெய்ய வரசர்களிற்றையெறிந்தவாளரவம்போலக்கண்டார் கண்ணை வவ்வியொளிவிட்டுமின்னுகின்றது மழை ஆதலான் வருவர். (கரு)

செலவுந்தரல்வேண்டிச்சென்றநங்காதலர்
வல்லேவருதறெளிந்தாம்வயங்கிழாய்
முல்லையிலங்கெயிறீனநறுந்தண்கார்
மெல்லவினிய நகும்.

(இதுவுமது.)

எ - து செல்வந்தேடிக்கொள்ளவேண்டிப்போயின நங்காதலர் விரைந்துவருதலைத்தேறினும் விளங்காநின்ற வணிகலனையுடையாய் முல்லைக்கொடிகள் (மகளி)ரிலங்கெயிறுபோலவிரும்பவைகை யழகியகுளிர்ந்த முகில்கள் மெல்லவினியவாகவொலியாநின்றன. (கச)

திருந்திழாய்காதலர்தீர்குவரலலர்
குருந்தின்குவியிணருள்ளுறையாகத்
திருந்துளிவண்டோடிருந்துமயி
யின்குழலூதும்பொழுது.

(இதுவுமது.)

எ - து திருந்தியவணிகலனையுடையாய் நங்காதலர்

கம்மைமீன்குவரல்லர் குருந்தினதுகுவிந்தவிணரினி டமே தனக்குறையுளாகவிருந்து இருக்கிப்பிளிதாயிருக் தவிளியென்னும்பண்ணைவண்டுகளபாடப் பெரியதும் பிகளினிய குழல்போலூதாநின்றவிக்காலத்தின்கண். ()

கருங்குயில்கையறமாமயிலாலப்
பெருங்கலியானமு ரனும்பெருந்தோ
ளசோகினிளந்தளிரன்னாநின்மேனிப்
பசலைப்பழங்கண்கொள.

(இதுவுமது.)

எ - து கருங்குயில்கள்செயலற்றுத்துன்பமுறவா மயில்களாகளித்தாடும்வகை பெரியகளிப்பையுடைய மழைமுழங்காநின்றது பெருந்தோளிணையுடையாய் நினதசோகின்றளிரன்னமேனியிற் பசந்தபசலை மெலிவு கொண்ணும்படி—எ-று. பழங்கண்-மெலிவு. (கக)

அறைக்கலிருவரைமேற்பாம்புசவட்டி
யறைகருரமீலரெறிபவ்வம்பருங்
புறைத்திருள்கூர்ந்தன்றுவரளமடநுண
பிறைத்தகைகொண்டன்றுபேதைநுதல்

(இதுவுமது.)

எ - து கடலீரைப்பருகிப் பறையொலிபோன்றிருக்கு மொலியையுடையவுருமேற்றெறிகின்று பாம்புகளைவருத்தி யுறைக்கலிதுவரைமேற்பெய்திருள்மிக்கது

இவ் வாகலாற்பிரிவின்றகைமையைக்கொண்டே த
ரய்ப்பிரிதுறுதல் — எ-று. (கஎ)

கல்பயில்கானங்கடந்தார்வரவாங்கே
நல்லிசையேறொடுவானநடுநிற்பச்
செல்வர்மனம்போற்கவினீன்றநல்கூர்ந்தார்
மேனிபோற்புல்லென்றகாடு.

(இதுவுமது.)

எ - து மலைநெருங்கியகானத்தைக்கடந்துபோயி
னார்வருமவகையவர்வருங்காலமுலந்தவாறே மிக்கவோ
சையையுடையவுருமேறுடனேமேகங்களுலகுகெல்
லாமொப்பநிற்றலாற்செல்வர்துமனம்போலவழகைத்த
கதன முன்புநல்கூர்ந்தார்மேனிபோலப்புல்லென்றிருந்
தகாடுகள் — எ-று. (கஅ)

நாஞ்சில்வலவனிறம்போலப்பூஞ்சினைச்
செங்கான்மராஅந்தகைந்தனபைங்கோற்
றொடிபொலிமுன்கையாய்போடுவினையாவேண்டி
நெடுவிடைச்சென்றநந்தன்னெஞ்சு.

(வினைமுற்றியதலைமகன்பாகற்குச்சொல்லியது.)

எ - து கலப்பைப்படை வென்றியையுடையவெ
ள்ளியோனிறம்போலப்பூவைக்கொம்மையுஞ்செவ்வியதா
ள்களையுமுடைய மராமரங்கள்விரிந்தனவாதலாற்பசு
மையுடையகோற்றொழிலையொலிக்குமுன்கையையுடை

யா மோன்க ளெனக்குத்துணையாகவேண்டி நெடியகா னத்தைக்கடந்துசென்றதென்மனம்-எ-று. (கக)

விறுசால்வேந்தன்வினையுமுடிந்தன
வாறும்பதமினியவாயினவருமணி
நாகமுழுங்கச்செருமன்னர்சேனைத்
தான்போலச்செல்லுமழை.

எ-து சிறப்பமைந்தவேந்தனுடைய வினைகளு முடிந்தன, வழிகளுஞ்செவ்வியினவாயின, வருமணிநாகங்கள் வருந்தும்வகை யுருமேற்றோடுகூடிச்செருமன்னர்சேனைத்தாளைப்போலச்செல்லாநின்றதுமுகில்- எ

பொறிமாண்புனைதிண்டேர்போந்தவழியே
சிறுமுல்லைப்போதெல்லாஞ்செவ்வி-நறுநுதற்
செல்வமழைத்தடங்கட்சின்மொழிப்பேதைவாய்
முள்ளெயிறேய்ப்பவடிந்து.

(இதுவுமது.)

எ-து எந்திரச்செய்கைகளான் மாட்சிமைப்பட்டபுனைதிண்டேர்போந்தவழியே சிறுமுல்லைப்போதுகளெல்லாஞ் செவ்வியாகியவழகியநுதலையுஞ் செல்வமழைபோன்றிருந்த கண்ணினையு மெல்லியமொழியினையுமுடையபேதைவாயின்கண் முள்ளெயிறாகவடிவுபெற்ற-எ-று. (நின்றது-என்னும்பயனிலை, தொக்கது

இளையருமீர்க்கட்டியரவுளையணிந்து
புல்லுண்கலிமாவும்பூட்டியநல்லா
ரிளநலம்போலக்கவினிவளமுடையா
ராக்கம்போற்பூத்தனகாடு.

(இதுவுமது.)

எ-து சேவகரு மழகிதாகக்கட்டியுடுத்தலைச்செய்ய சாமரையைத்தலையின்கணணிந்து புல்லுண்டகலிமாவினையுந்தேரோடுபூட்டுதலைச்செய்யும்வகை நல்லாராகியமகளிரிளநலம்போலவழகுபெற்று வருவாயுடையாருடையசெல்வம்போலப்பூத்தனகாடு-எ-று.(௨௨)

கண்டிரணமுத்தங்கடுப்பப்புறவெல்லாந்
தண்டுளியாலிபுரளப்புயல்கான்று (லோ
கொண்டெழில்வானமுங்கொண்டன்றெவன்கொ
லொண்டொடியூடுநிலை.

எ. து தோழிதலைமகட்குப் பருவங்காட்டிவற்புறுத்தியது-எ-று.' (௨௧.)

எல்லாவினையுங்கிடப்பவெழுநெஞ்சே
கல்லோங்குகானங்களிற்றின்மதநாறும்
பல்லிருங்கூந்தல் பணிநோனாள்கார்வான்
மெல்லவுந்தோன்றுஞ் செயல். (௨௪)

கருங்காலவாகின்போரிப் போரபவரும்
விரைநீர்த்தண்புறவிற்றெறுவிமலர்ந்தன

சேர்ந்தனைசெய்குறைவாராவனைநு
கூர்ந்தபசலையவட்கு. (௨௫)
நலமிகுகார்த்திகைநாட்டவரிட்ட
தலைநாள்விளக்கிற்றகையுடையவாகிப்
புலமெலாம்பூத்தனதோன்றிசின்மென்மொழி
தூதொடுவந்தமழை. (௨௬)
முருகியம்போல்வானமுழங்கியிரங்க
குருகிலைபூத்தனகானம்பிரிவெண்ணி
யுள்ளாதகன்றாரென்றுடியாம்பாராட்டிப்
பள்ளியுட்பாயும்பசப்பு. (௨௭)
இமிழிசைவானமுழக்கக்குமிழினைப்பூப்பொன்செய்
குழையிற்றுணராதூங்கத்தன்பதஞ்செவ்வி
யுடையதாகெஞ்சேகாதலியூர
கல்லையழுங்கச்செலற்கு. (௨௮)
பொங்கருஞாங்கர்மலர்ந்தனதாங்காக்
கைவனகொன்றூழும்பகைகொண்ட
வெவ்வலத்திசைகளும்வந்தனறாநாளுஞ்
செவ்வியுடையசுரம். (௨௯)
வரைமல்கவானஞ்சிறப்பவுறைபோழுக
திருவிலநீமபெயருழத்திரைநாற
லூதையுளருநறுக்கனைகாப்பனை
பெருமடமாட்டுரைத்து. (௩௰

கருஞ்சேனிக்கத்தானைகருங்களிர்ச்சேர்ந்த
தெருமையெழிலேவெறியவர்சூடிச்
செருமிருமள்ளரிற்செம்மாக்குஞ்செவ்வி
இருந்தகழியாளுசெய்குறி. (௧௧)

காலோடக்கொண்டகடாஅப்புகழ்வேட்டைக்
செல்வர்மனம்போற்படாஅது
மகிழ்வண்டுபோன்மூசுங்கானம்
பிடாஅப்பெருந்தகைநற்கு. (௧௨)

கடனீர்முகந்தகமஞ்சூலெழிலி
குடமலையாகத்துக்கொள்ளப்பிறக்கு
மிடமெனவாங்கேகுறிசெயதேம்பேதை
மடமொழியெவ்வங்கெட. (௧௩)

விரிதிரைவெள்ளம் வெறுப்பப்பருகிப்
பெருவிறல்வானம்பெருவரைசேருங்
கருவணிகாலங்குறித்தார்திருவணிந்த
வொண்ணுதல்மாதர்திறத்து. (௧௪)

சென்றநகைகாதலர்சேணிகந்தாரொண்ணி
யொன்றியநோயோடிடும்பைபலகூர
வென்றிமுரசினிரங்கியெழிலவான
நின்றுமிரங்குமிவட்கு. (௧௫)

சிரல்வாய்வனப்பினவாகிநிரலொப்ப
நீர்ந்தண்டளவந்தகைத்தனசீர்த்தக்க

செல்வமழைமதர்க்கட்சின்மொழிப்பேதையூர்
கல்லீந்ததாகநமக்கு.. (௩௬)
கருங்கடன்மேய்ந்தகமஞ்சூலெழிலி
யிருங்கல் லிறுவரையேறியுயிர்க்கும்
பெரும்பதக்காலையும்வாரார்கொல்வேந்த
னருந்தொழில்வாய்த்தநமர் (௩௭)
புகர்முகம்பூழிபுரளவுயர
நிலைவெஞ்சினவேழமபிடியோடிணைதாழத்
தண்பதக்காலையும்வாராரெவன்கொலோ
வொண்டொடியூடுநிலை. (௩௮)
அலவன்கணேய்ப்பவரும்பீன்றவிழ்ந்த
கருங்குரனொச்சிப்பசுந்தழைசூடி
யிரும்புனமேர்க்கடிகொண்டார்பெருங்கவ்வை
யாகின்றுநம்மூரவர்க்கு.

(இதுவுமது.)

எ-து அலவனது கண்ணினையேய்ப்பவரும்பினை யீன்று பின்மலர்ந்த கருங்கதிரினையுடைய நொச்சிப்பசுந்தழையைச்சூடிப்பெரும் புனங்களையுமவர்புதிதாகவே, குழுவிக்கத்தொடங்கினார்கள் ஆதலானம்மூரின்கட்பெரியவலராயிற்று நவகாதலராகிவர்க்கு—எ-று. (௩௯)

வந்தனஞ்செய்குறிவாராரவரென்று
கொந்தவொருத்திக்குநோய்தீர்மருந்தாகி.

பீர்ந்தின்கருவண்ணங்கொண்டதெழில்வான்,
கநதுமென்பேதைநுதல்.

எ-து பருவங்காட்டித்தலைமகளைத்தோழிவற்புறுத்தியது. அவர்செய்குறிகளாறுந்தன, அவர்வருமிலரென்று தேர்ந்தவொருத்தியாகிய நினக்குநோய் தீர்க்குமருந்தாகியீரகதின்கனியினிறம்போலக் கருநிறத்தைக்கொண்டதெழில்வான், மெல்லியபேதாய்நின்னுடையநுதல் விளியொளிபெறநந்தும்—எ-று. ஈங்கென்பதனை-யீகதென்றுகுறுக்கியது. (௪0)

கார்நாற்பதுமூலமும்உரையும்

முற்றிற்று.

இந்நூலில்-உ௩-வது செய்யுள்முதல்-௩௮-வது, செய்யுளவரைபிரதிகளிலுரைகாணப்படவில்லை. கல்விச்செல்வமிக்குடையார் தமது பிரதிகளிலுளதாயதனைத்தெரிவிப்பாராயின (உ) வது முறையச்சிடுவதுடன் அச்சிடுத்தெரிவிப்போர்பெயரையும வெளியிடப்படும்.

இங்ஙனம்,

கொ-சண்முகசுந்தரமுதலியார்